www.xtrapapers.com

Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2021**

INSERT **1 hour 30 minutes**

* 4 6 3 2 7 4 3 4 9 2 - I *

**INFORMATION**

- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

NL 208720/1
© UCLES 2021

[Turn over

www.xtrapapers.com



Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–11** on the Question Paper.

கோபி கொஞ்சம் பரபரப்பாகவும் பயந்து கொண்டும் இருந்தான். அவன் கிராமத்தை விட்டு வரும்போது மிகவும் சின்னக் குழந்தையாக இருந்தான். அவன், அவனுடைய தாத்தா, பாட்டி இருந்த வீட்டைப் பார்க்கக் கிளம்பினான். அவர்கள் இருவரும் இப்பொழுது உயிருடன் இல்லை. ஆனால் வீட்டின் சொந்தக்காரரோடு பேசி, தான் வரலாமா என்று கேட்டான். அவர்கள் சரி என்று சொன்னதைக் கேட்டு வியப்படைந்தான்.

இதற்கு முன்னால், அவன் ஒரு கிராமத்தையும் பார்த்ததில்லை. அவன் பெரியவனாகும் வரை பெரிய நகரத்தில் வசித்து வந்தான். கிராமத்தில் இருக்கும் இவர்களுடைய வீட்டில் வசிக்கும் புது வீட்டுக்காரர் வீட்டிற்கு இரயில் நிலையத்திலிருந்து எப்படி வர வேண்டும் என்று எழுதியிருந்தார். அவன் இரயிலில் வந்து இறங்கி கிராமத்தை நோக்கி நடந்தான். ஒரு மண் தெருவில் நடக்கும்போது கிழிந்த உடைகள் அணிந்த மக்கள் இவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பிறகு இரண்டு முதிய பெண்கள் இவனைப் பார்த்துச் சிரித்துக் கைகளை ஆட்டினார்கள். அவனும் பதிலுக்குக் கையை ஆட்டினான். பிறகு அவர்கள் அவனுக்குத் தெருவின் கடைசியில் இருக்கும் ஒரு ரோஸ் நிற வீட்டைக் காட்டினார்கள்.

அவன் கதவைத் தட்டினான். அந்த வீட்டின் சொந்தக்காரர் கதவைத் திறந்து அவனை வரவேற்றார். வீட்டின் சொந்தக்காரர், முன்னால் இருந்த வீட்டைக் கொஞ்சம் மாற்றி கட்டி இருப்பதாகக் கூறினார். கூடுதலாக ஒரு படுக்கை அறையும் ஒரு குளிக்கும் அறையும் கட்டி இருப்பதாக் கூறினார், இக்காலத்திற்கு ஏற்றவாறு கொஞ்சம் மாற்றி இருப்பதாகச் சொன்னார். பிறகு அவர் இந்த வீட்டிற்கு வரும்போது சில சாமான்கள் இருந்ததாகவும், அதைத் தான் கவனமாக வைத்து இருப்பதாகவும் கூறினார். அவர் படுக்கை அறையில் அலமாரியில் உள்ள ஒரு டிராயரைத் திறந்து இரண்டு படங்களை எடுத்து அந்த இளைஞனிடம் காட்டினார். ஒரு படத்தில் வயதான தம்பதிகள் ஒரு குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டிருந்தனர். கோபி படத்தில் இருந்த தன் தாத்தா பாட்டியை அறிந்து கொண்டான். அவனுடைய பெற்றோர் இந்தப் படத்தை ஏற்கனவே அவனிடம் காட்டி இருக்கிறார்கள். அடுத்த படத்தில் இரண்டு இளம் பெண்கள் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தனர். வீட்டின் சொந்தக்காரர், அவனிடம், அந்த இரண்டு பெண்களும் சகோதரிகள் என்றும், அவர்கள் தான், வழியில் உன்னைப் பார்த்து கைகளை ஆட்டினார்கள் என்றும் கூறினார். அவர்கள் இங்கிருந்து மூன்று வீடுகள் தள்ளி இருப்பதாகக் கூறினார். வீட்டின் சொந்தக்காரர், அந்த சகோதரிகள் இருவரும் அவனை அன்று இரவு உணவுக்கு அழைத்திருப்பதாகக் கூறினார்.

இரவு உணவின்போது இரண்டு பெண்களும் பல பழைய படங்களைக் காட்டி அவனிடம் பல பழைய கதைகள் சொன்னார்கள். ஒரு தடவை கோபி சிறியவனாக இருந்த போது, அவனை, அவனுடைய கொள்ளுத் தாத்தாவிடம் விட்டு விட்டு,

www.xtrapapers.com



கோபியின் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி எல்லாரும் பக்கத்து ஊரில் ஒரு திருமணத்திற்குப் போயிருந்தபோது இந்தப் பெண்கள் தான் கொள்ளுத் தாத்தாவிற்கு உதவி செய்திருந்தனர்.

© UCLES 2021 

www.xtrapapers.com



BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.

© UCLES 2021 